NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 15 ஆம் ஞாயிறு | 12 ஜூலை 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*



மாதாந்திர நோக்கம்:

சூழலியல் – நமது பொதுவான இல்லத்தைப் பராமரித்தல்

# இறைவனின் வார்த்தை: படைப்பிற்கான புதுப்பித்தலின் விதைகள்

இன்றைய வாசகங்கள், இறைவனின் வார்த்தையின் வல்லமையையும் படைப்புடனான நமது உறவையும் பற்றி ஆழமாகச் சிந்திக்க நம்மை அழைக்கின்றன. முதல் வாசகத்தில், நிலத்தின் மீது மழையும் பனியும் பொழிவதைப் பற்றிய அழகான உவமையை எசாயா பயன்படுத்துகிறார். அவை முதலில் மண்ணிற்கு நீர்ப்பாய்ச்சி, பூமியை வளப்படுத்தி, பலனை உண்டாக்காமல் வானத்திற்குத் திரும்புவதில்லை. அதேபோல, இறைவனின் வார்த்தை வல்லமையும் நோக்கமும் உடையது; அது ஒருபோதும் வெறுமையாகத் திரும்புவதில்லை. அது நமக்கு ஆன்மீக வளர்ச்சியையும் வாழ்வாதாரத்தையும் வழங்குகிறது.

மழை, மண் மற்றும் வளர்ச்சி பற்றிய இந்த உருவகம், நமது பொதுவான இல்லத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கும், படைப்பில் வேரூன்றிய ஆன்மீகத்தில் வாழ்வதற்கும் நமக்குள்ள அழைப்புடன் அழகாக இணைகிறது. **இயற்கையே இறைவனின் தாராள குணத்தையும் உண்மையையும் வெளிப்படுத்துகிறது**. பூமி மழையைத் திறந்த மனதுடன் ஏற்றுக்கொண்டு, ஏராளமாகக் கனி கொடுக்கிறது. அதுபோலவே, இறைவனின் வார்த்தை வேரூன்றி செழித்து வளரக்கூடிய வளமான மண்ணாக மாற நமது இதயங்கள் அழைக்கப்படுகின்றன.

நற்செய்தியில், இயேசு விதைப்பவர் மற்றும் விதை பற்றிய உவமையைக் கற்பிக்கிறார். அந்த விதை, எல்லா மக்களிடமும் தாராளமாகத் தூவப்பட்ட இறைவனின் வார்த்தையைக் குறிக்கிறது. ஆயினும், விதையின் வளர்ச்சி மண்ணின் நிலையைப் பொறுத்தே அமைகிறது. இயேசுவே அந்த அடையாளம், அதாவது நமக்கு மத்தியில் விதைக்கப்பட்ட விதை. அவர் நமக்குள் வேரூன்ற விரும்புகிறார்.

நம்முடைய உள்ளங்கள் எனும் “மண்ணைப்” பற்றிச் சிந்தித்துப் பார்க்க இயேசு நம்மை அழைக்கிறார். நாம் கடவுளுடைய வார்த்தைக்குத் திறந்த மனதுடனும், தாழ்மையுடனும், ஏற்புடைமையுடனும் இருக்கிறோமா, அல்லது சுயநல ஆசைகள், அக்கறையின்மை மற்றும் உலகக் கவலைகளால் திசை திருப்பப்படுகிறோமா?

இந்த உவமையானது, படைப்பின் மீதான நமது பொறுப்பையும் நமக்கு நினைவூட்டுகிறது. நல்ல மண் பேணப்படவும், பாதுகாக்கப்படவும், வளர்க்கப்படவும் வேண்டும். மனிதகுலம் பேராசை, வீண்விரயம் மற்றும் அலட்சியத்தின் மூலம் சுற்றுச்சூழலைத் தவறாகப் பயன்படுத்தும்போது, படைப்பு துன்புறுகிறது. இரண்டாம் வாசகத்தில், புனித பவுல், படைப்பு முழுமையும் விடுதலைக்காகவும் புதுப்பித்தலுக்காகவும் ஏங்கி, வேதனையில் தவிக்கிறது என்று கூறுகிறார். பூமியின் துன்பம், மனிதனின் பாவம் மற்றும் பொறுப்பின்மையின் விளைவுகளைப் பிரதிபலிக்கிறது. ஆயினும், பவுல் எதிர்நோக்கைப் பற்றியும் பேசுகிறார் கடவுளின் பிள்ளைகளுக்குரிய பெருமையையும் விடுதலையையும் தானும் பெற்றுக்கொள்ளும் என்ற எதிர்நோக்கோடு இருக்கிறது.

கிறிஸ்தவர்களாகிய நாம், வார்த்தையைக் கேட்பதற்கு மட்டுமல்ல, அதன்படி வாழ்வதற்கும் அழைக்கப்பட்டுள்ளோம். நமது பொதுவான இல்லத்தைப் பராமரிப்பது நமது நம்பிக்கையின் மற்றும் பணியின் ஒரு பகுதியாகும். கடவுள் நம்மிடம் ஒப்படைத்துள்ள நமது சுற்றுச்சூழலுக்கு நாம் பொறுப்பேற்க வேண்டும். நிலையான வாழ்க்கை முறைகள், இயற்கையின் மீதான நன்றியுணர்வு, வளங்களைப் பொறுப்புடன் பயன்படுத்துதல் மற்றும் அனைத்து உயிரினங்கள் மீதும் இரக்கம் காட்டுதல் ஆகியவற்றின் மூலம், நாம் கடவுளின் கொடைகளுக்கு உண்மையுள்ள பாதுகாவலர்களாக மாறுகிறோம். நமது இதயங்கள் மிகுந்த கனிகளைத் தரும் வளமான மண்ணாக மாறட்டும், அதன் மூலம், கடவுளின் வார்த்தை நமது காயப்பட்ட உலகிற்கு குணத்தையும், புதுப்பித்தலையும், நம்பிக்கையையும் கொண்டு வரட்டும்.

**இன்றைய இறைவார்த்தை:**

எசாயா : 55:10-11
திருப்பாடல் 65: 10-14
உரோமையர் 8: 18-23
மத்தேயு 13: 1-23 (அ) 13:1-9

## இடமாற்றம் குறித்த அறிவிப்பு

உயர்மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில் (API) சீரமைப்புப் பணிகள் நடைபெறவிருப்பதால் எதிர்வரும் ஜூலை 15, 2026 முதல் மேய்ப்புப்பணி மையத்தில் (APC) அமைந்திருக்கும் அலுவலகம் கோலாலம்பூர் , ஜலான் பீல், திரு இருதய ஆண்டவரின் ஆலய வளாகத்திற்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கிறது என்பதைத் தெவிரித்துக்கொள்கிறோம். இந்த இடமாற்றம் மறுஅறிவிப்பு வரும்வரை நடைமுறையில் இருக்கும்.

கூடுதல் விவரங்களுக்கு: தொலைபேசி எண்:
**016-366 9461**

INTERNAL CIRCULATION ONLY
BUL 28/2026

**வெளியீடு**: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org